இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 18.04.2026

# தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது!

‘தொகுதி மறுசீரமைப்பு’ என்ற பெயரால், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் குரலை ஒடுக்கத் திட்டமிடுகிறது ஒன்றிய பா.ஜக. இதற்கு எதிராக மாபெரும் எழுச்சி முழக்கங்களை தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பி வருகிறார்கள்.

இதைத் தொடர்ந்து வீடுகள்தோறும், வீதிகள்தோறும் கருப்புக் கொடியை ஏற்ற உத்தரவிட்டு இருந்தார். கழக நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டமும், கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டமும் அவசரமாகக் கூட்டப்பட்டது.

அதில் நாடாளுமன்றத்தில் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதையும், மக்கள் மன்றத்துக்கு இதனை எப்படிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் விரிவாக விளக்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

நாமக்கல்லில் தேர்தல் பரப்புரையில் இருந்த முதலமைச்சர் அவர்கள் கருப்புக்கொடி ஏற்றினார்கள். தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நகலைத் தீயிட்டு எரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஏனென்றால் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரத் திட்டமிட்டிருக்கும் சட்டமானது, தமிழ்நாட்டுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவே இருக்கிறது.

அரசியலமைப்புச் சட்ட ( 131ஆவது திருத்த ) மசோதா என்று இதற்குப் பெயர். நாடாளுமன்றங்களிலும் சட்ட மன்றங்களிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்கும் ‘நாரி சக்தி வந்தனன் அதினியம், (2023 இன் 106ஆவது திருத்தம்) என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துவதே இதன் நோக்கமாகச் சொல்லப்படுகிறது. மகளிர் சட்டமானது மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகுதான் என்று முதலில் சொல்லப்பட்டது. ஆனால் இதனை இப்போதே செய்யப் போவதாகச் சொல்கிறார்கள்.

**இந்தச் சட்டத்தின்படி மக்களவை இடங்கள் 543 என்ற எண்ணிக்கையில் இருந்து 850 ஆக உயரப் போகிறது. இதில் தான் பல சதி வலைகள் பின்னப்பட்டு உள்ளன. அனைத்து மாநிலங்களில் இருந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இப்போது 530 ஆக இருக்கிறது. இந்த எண்ணிக்கையை 815 ஆக உயர்த்தப் போகிறார்கள். யூனியன் பகுதிகளில் இருந்து வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆக இருக்கிறது. இதனை 35 ஆக உயர்த்த இருக்கிறார்கள். ஆக மொத்தம் 850 என்று எண்ணிக்கை உயரப் போகிறது.**

இப்போது செய்ய இருக்கும் அரசியலமைப்புச் சட்டத் திருத்தமானது, அரசியலமைப்புச் சட்டத்தில் 55,81,82,170, 330,332,334A ஆகிய பிரிவுகளைத் திருத்தப் போகிறது. மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றுவது என்பது மிக முக்கியமான திருத்தம் ஆகும்.

2011 மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து தொகுதிகளின் எண்ணிக்கை மாநிலங்களில் அதிகரிக்க இருக்கிறது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை மிகச் சிறப்பாகப் பின்பற்றிய மாநிலங்கள் இதில் பின்னடைவைச் சந்திக்கின்றன. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றாத மாநிலங்கள் இதனால் பலனடையும்.

உத்திரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய ஐந்து மாநிலங்கள் அதிகமான பலனை அடையப் போகின்றன. இன்று 80 இடம் வைத்துள்ள உத்திரப்பிரதேசம், 140 இடங்களைப் பெறும். 40 இடம் வைத்துள்ள பீகார் 73 இடங்களைப் பெறும். 25 இடங்களை வைத்துள்ள ராஜஸ்தான், 48 இடங்களைப் பெறும். 29 இடங்களை வைத்துள்ள மத்தியப்பிரதேசம், 51 இடங்களைப் பெறும். 48 இடங்களை வைத்துள்ள மகாராஷ்டிரா மாநிலம் 79 இடங்களைப் பெறும்.

இந்தி பேசும் மாநிலங்கள் என்று சொல்லப்படுபவை ( உபி, பீகார், மபி, ராஜஸ்தான், அரியானா, சத்தீஸ்கர், உத்திரகாண்ட், டெல்லி) இதுவரை 207 இடங்களை மொத்தமாக வைத்துள்ளன. இந்த இடங்களின் எண்ணிக்கை இனி 366 ஆக ஆகும். இதனை விழுக்காடு அடிப்படையில் சொன்னால் 77 விழுக்காடு அதிகரிப்பு ஆகும். இந்திய நாடாளுமன்றத்தில் இப்போது அவர்கள் 38.1 விழுக்காடு இருக்கிறார்கள். இனி 43.1 விழுக்காடாக உயர்ந்து நிற்பார்கள்.

இந்தத் தொகுதி சீரமைப்பில் தமிழ்நாடு 39 என்ற எண்ணிக்கையில் இருந்து 51 ஆக உயரும். கேரளா 20 ஆக இருக்கிறது. இனி 23 ஆகும். 42 ஆக இருக்கும் ஆந்திரா, தெலங்கானா 59 ஆகும். ஒடிசா 21 இலிருந்து 29 ஆகும். மேற்கு வங்கம் 42இலிருந்து 64 ஆகும். தொகுதி சீரமைப்பால் குறைவான பலனைப் பெறும் மாநிலங்கள் இவை.

**தென்னிந்திய மாநிலங்கள் (தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா, கேரளா, புதுச்சேரி) என்று சொல்லப்படும் மாநிலங்களில் இருந்து இதுவரை 132 உறுப்பினர்கள் மட்டுமே தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இந்த எண்ணிக்கை 132 இலிருந்து 176 ஆக மட்டுமே உயர்ந்துள்ளது. இது விழுக்காடு அடிப்படையில் 33 விழுக்காடு அதிகரிப்பு மட்டுமே. வட மாநிலங்களில் 77 விழுக்காடு அதிகரித்துள்ளது. ஆனால் தென் மாநிலங்களில் 33 விழுக்காடு மட்டுமே அதிகரித்துள்ளது. இதனைத்தான் பாகுபாடு என்கிறோம்.**

**இன்றைய நாடாளுமன்றத்தில் தென்னிந்திய மாநிலங்களின் பங்களிப்பு என்பது 24.4 விழுக்காடு ஆகும். இனி இந்த விழுக்காடு 20.7 ஆக குறையும். இதனைத்தான் பாகுபாடு என்கிறோம்.**

**இந்திய நாடாளுமன்றத்தில் இந்தி பேசும் வட மாநில உறுப்பினர்களின் பிரதிநிதித்துவமானது 43.1 விழுக்காடாக இருக்கும். ஆனால் தென்னிந்திய மாநில உறுப்பினர்களின் பிரதிநிதித்துவமானது 20.7 விழுக்காடாக இருக்கும். தென்னிந்திய மாநிலங்களின் தயவு இல்லாமல் இனி ஒன்றியத்தில் யாரும் ஆட்சி செய்யலாம் என்பதே இன்று உருவாக்கப்பட்ட அரசியல் சதி ஆகும்.**

இந்தியாவின் கிழக்கு மாநில உறுப்பினர்களின் எண்ணிக்கை 14.4 இலிருந்து 13.7 ஆக குறையும். வடகிழக்கு மாநில உறுப்பினர்களின் எண்ணிக்கை 4.4 இலிருந்து 3.8 விழுக்காடாகக் குறையும்.

இதில் இன்னொரு பெரிய ஆபத்து இருப்பதாக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார். ‘தமிழ்நாட்டின் எண்ணிக்கை உயர்கிறது என்பதே மாயை ஆகும். இப்போது 39 உறுப்பினர்கள் இன்று இருப்பதை 58 ஆக உயர்த்தி விட்டு, தொகுதி மறுவரையறைக்குப் பிறகு அது 46 ஆக குறைந்துவிடும். தொகுதி மறுவரையறைக்குப் பிறகு மக்களவையில் தென் மாநிலங்களின் குரல் இன்னும் அதிகமாக நசுக்கப்படும். உறுப்பினர்களின் எண்ணிக்கை இன்னும் குறைக்கப்படும்” என்று சொல்லி இருக்கிறார்.

**தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. கெடுதல்தான் செய்யும் என்பது திரும்பத் திரும்ப மெய்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு பாதிக்கப்படாமல் காக்க அனைத்தையும் செய்தாக வேண்டும்.**



நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சார கூட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு சிறுபான்மை பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் சி.பெர்ணான்டஸ் ரத்தின ராஜா மற்றும் தமிழ்நாடு அனைத்து சி.எஸ்.ஐ. கூட்டமைப்பைச் சார்ந்த பேராயர்கள் சந்தித்து, கிறிஸ்தவ பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன், அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ராஜேஷ்குமார், நாமக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திருமதி ப.இராணி, சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

### கோவில் நிலப் பிரச்சினையில் அ.தி.மு.க. ஆட்சியில் துரோகம் செய்துவிட்டு இப்போது நாடகம் ஆடுகின்றனர்!

# திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்ததும் நிரந்தரத் தீர்வு காணப்படும்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர், ஏப். 18 -

கரூர் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தொகுதி மறு வரையறை என்ற பெயரில் தமிழகத்திற்கு துரோகம் செய்யும் பா.ஜ.க. அரசை கண்டித்து கருப்பு கொடி போராட்டம் நடைபெற்றது. மக்கள் தொகையை சிறப்பாக கட்டுப்படுத்தியதற்கு தண்டனையா என எங்கள் தலைவர் அவர்கள் கேள்வி எழுப்பி உள்ளார்கள்.

கரூர் வெண்ணைமலை கோவில் நிலப் பிரச்சினை அதிமுக ஆட்சியில் உருவானது. கூட்டணி வைத்துள்ள பா.ஜ.க. தொடர்பு அமைப்பைச் சேர்ந்தவர் வழக்கு தொடர்ந்தார். அதிமுக ஆட்சியில் அதிகாரிகள் ஆவணங்களை தவறாக தாக்கல் செய்தனர். அதன் அடிப்படையில் நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. கோவில் நிலப்பிரச்சனையை தீர்க்க முடியாமல் திணறி யார் பின்வாங்கினார்களோ, யார் துரோகம் செய்தார்களோ அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தீர்ப்போம் என கூறுவதை மக்கள் நம்ப மாட்டார்கள் இவர்களால் வர முடியாது.

கோவில் நிலப் பிரச்சினையில் தி.மு.க. நடவடிக்கை பாதிக்கப்பட்டவர்களுக்கு வக்கீல்கள் மூலமாக நாங்கள் உதவி செய்து வருகிறோம். முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் இரண்டு டி.ஆர்.ஓ கள் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவது உறுதி ஆட்சி பொறுப்பேற்றதும் ஆவணங்களின் அடிப்படையில் கரூர் மாவட்டத்தில் இனாம் நிலப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்படும்.

செய்த துரோகத்தை மறைக்க அனுமதியின்றி



அவதூறு பரப்பும் வகையில் நோட்டீஸ் வழங்கியதை நாங்கள் தேர்தல் ஆணையத்தில் புகார் செய்துள்ளோம். இது குறித்து அதிமுகவினர் பேட்டி கொடுக்கும் போது பத்திரிகையாளர்கள் மறு கேள்வி கேட்பதில்லை. யார் ஆட்சியில் இருந்த பிரச்சினை வந்தது?. யார் எந்த மாதிரியான ஆவணங்களை தாக்கல் செய்தார்கள்?. என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது?. வழக்கை நடத்தியது யார்?. நீங்கள் இதில் என்ன உதவி செய்வீர்கள்?. என்றெல்லாம் கேட்பதில்லை சொல்ல கூடியதை அப்படியே இங்கு வந்து கேட்கிறீர்கள்.

**சைலண்ட் மோடில் மீடியாக்கள்!**

அ.தி.மு.க. ஆட்சியில் என்ன சாதனையை செய்தீர்கள்?. ஏன் உங்கள் சாதனைகளை சொல்லி ஓட்டு கேட்பதில்லை?. தனி நபர் விமர்சனத்தை ஏன் தொடர்ந்து வைக்கிறீர்கள்?. பாதுகாப்பு இல்லை என்று கூறி ஏன் மனு கொடுத்தீர்கள்?. எல் ஜி பி பங்க் பின்புறம் பட்டி அமைத்துள்ளீர்களே?. அடுத்தவர்கள் அமைத்தால் அதுபட்டி. நீங்கள் அமைத்தால் அது தங்க கொட்டகையா?. இதைப்பற்றி யாரும் கேட்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும் . சீர்தூக்கி பார்த்து செய்திபோட கேட்டுக் கொள்கிறேன். சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொய் பிரச்சாரம் செய்யும் அதிமுக ஒரு போதும் ஆட்சிக்கு வர முடியாது. மக்கள் நல்ல முடிவை வழங்க தயாராகி விட்டனர். திருடன் திருடி விட்டு திருடன் திருடன் என்று கூறி ஓடி தப்பிக்க முயற்சி செய்வானாம். அதுபோல் கோவில் நிலபிரச்சனையில் அதிமுகவின் செயல்பாடு இருக்கிறது.

**கோவையில் தங்க நகை பூங்கா!**

தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு பொற்கொல்லர்கள் நகை விற்பனையாளர்கள் வாழ்வை மேம்படுத்துவதற்காக கோவை தெற்கு தொகுதியில் ரூ. 126 கோடி செலவில் தங்க நகை பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அங்குள்ள அதிமுக வேட்பாளர் அவர்கள் ஆட்சியில் எதுவுமே செய்யாமல் இதில் கூறும் தவறான கருத்தை வந்து என்னிடம் கேட்கிறீர்கள். அவர் கேட்கும் போதே ஹால்மார்க் அதிகாரம் யாரிடம் இருக்கிறது ஒன்றிய அரசிடம் தானே இருக்கிறது. நீங்கள் கூட்டணி வைத்துள்ளீர்கள் என்ன செய்தீர்கள் என்று நீங்கள் கேட்டிருக்க வேண்டும்.

எங்களை பொறுத்தவரையில் கழக ஆட்சியின் சாதனைகளை கூறி வாக்குகளை சேகரித்து வருகிறோம். 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பரமத்தி வேலூர், திருச்செங்கோடு தொகுதியில் திண்டுக்கல் லியோனி பரப்புரை!

## கே.எஸ்.மூர்த்தி-ஈ.ஆர்.ஈஸ்வரனை ஆதரித்து தீவிரப்பிரச்சாரம்!

நாமக்கல், ஏப். 18 -

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் மற்றும் திருச்செங்கோடு தொகுதிகளில் திமுக மற்றும் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தி.மு.க. பேச்சாளர் திண்டுக்கல் ஐ. லியோனி தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பரமத்தி வேலூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கே.எஸ். மூர்த்தியை ஆதரித்து பேருந்து நிலையம் மற்றும் கபிலர்மலை அடிவாரப் பகுதிகளில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். அப்போது தி.மு.க. அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகளை விளக்கி, குடும்பத் தலைவிகளுக்கான 8000 கூப்பன் உள்ளிட்ட அறிவிப்புகள் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்தார். மேலும் அ.தி.மு.க. தலைமையை விமர்சித்த அவர், இந்த தேர்தலில் அதிமுக கூட்டணி தோல்வியடையும் எனக் கூறினார்.

இதேபோல் திருச்செங்கோடு தொகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக ஆதரவில் போட்டியிடும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரனுக்கு ஆதரவாக வையப்பமலை மற்றும் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே நடைபெற்ற பிரச்சார கூட்டங்களில் லியோனி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், தமிழகத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெறும் என்றும், எடப்பாடி தொகுதியிலும் திமுக வெற்றி பெறும் என்றும் தெரிவித்தார். மேலும் எடப்பாடி பழனிசாமி தோல்வியடைவார் எனக் கூறிய அவர், தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாகவும் குற்றம்சாட்டி, அதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முறியடிப்பார் என்றார்.

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக மக்கள் திமுக அரசிற்கு ஆதரவு அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். திருச்செங்கோடு தொகுதியில் ஈ.ஆர். ஈஸ்வரன் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்றும், அவருக்கு வாக்களிக்க பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

### தூபிகளில் உள்ள சிங்கங்கள்

## தென்னிந்தியர்களைத் தின்று விடக்கூடாது !

நாடாளுமன்றத் தொகுதிகளின்
மறு வரையறை குறித்து
இந்திய
இறையாண்மையைப் போலவே
அறிவுலகமும் அச்சப்படுகிறது

இந்தியா
தெற்கு என்ற திசையைக்
கழித்துவிட்டு
மூன்று திசைகளோடு இயங்க
முடிவுகட்டியிருப்பதாய்த்
தோற்றம் தருகிறது

இந்த மறுவரையறை
மக்கள் தொகையை
முன்னிறுத்துகிறதா
மாநில நலன்களை
முன்னிறுத்துகிறதா
என்ற கேள்விகளோடு
விவாதிக்கப்பட வேண்டும்

வட இந்தியாவைவிடத்
தென்னிந்தியாவின்
உறுப்பினர் எண்ணிக்கை குறைவது
இந்தியா தன் உறுப்பையே
குறைத்துக்கொள்வது போன்றதாகும்

விந்திய மலைக்குத்
தெற்கே உள்ளது விந்தியா என்றும்,
வடக்கே உள்ளதே இந்தியா என்றும்
ஒரு பூகோளப் புரட்சி நடப்பதற்கு
இந்தப் புது மசோதா வழிவகுக்கும்

பெண்களுக்கு இட ஒதுக்கீடு
தேவையெனில்
இருக்கும் தொகுதிகளைப்
பிரித்துக்கொடுக்கலாமே!
அல்லது அமைச்சரவையில்
மூன்றில் ஒரு பங்கு
இடமளிக்கலாமே!

நாடு
கடினமான பலகேள்விகளைக்
கடக்கவேண்டி இருக்கிறது

பெரியவர்களே
சிந்தியுங்கள்

தூபிகளில் உள்ள சிங்கங்கள்
தென்னிந்தியர்களைத்
தின்றுவிடக் கூடாது

**கவிப்பேரரசு வைரமுத்து**





திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர்– அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் லால்குடியில் வேட்பாளர் பாரி வள்ளலுக்காக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அவருடன் பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு, ஒன்றிய செயலாளர் செல்வராஜ், பெரியய்யா, நகர மன்ற தலைவர் துரை, துரை கந்தசாமி உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.